# SHAKTHII ACADEMY

Increasing Confidence ; Reaching Goals

## 8th chemistry Important Questions and Answers

1.பட்டாசுத் தொழிற்சாலைகளிலும், இராக்கெட் எரிபொருளைப் பற்றவைக்கும் பொருளாகவும் பயன்படுவது?

விடை: போரான்

2.கனிமச் சேர்மங்கள் என்பது ?

விடை: பாறைகள்,தாதுக்கள் போன்ற உயிரற்ற பொருள்களிலிருந்து கிடைக்கப்பெறும் சேர்மங்கள் கனிமச் சேர்மங்கள் ஆகும். உதாரணம் : சுண்ணக்கட்டி, ரொட்டி சோடா

3.தாமிர சல்பேட் என்பது ?

விடை: மயில் துத்தம்

4.நீரின் வேதிப்பெயர் ?

விடை: டை ஹைட்ரஜன் மோனாக்சைடு

5.வெப்பநிலைமானிகளில் பயன்படுத்தப்படும் திரவ உலோகம்?

விடை: பாதரசம்

Shakthii



**Coaching for : Bank / SSC / Railways / TNPSC / Insurance / CSAT / TNUSRB 9884 222249**

6.மின்சாரத்தை கடத்தும் அலோகம் ?

விடை: கார்பனின் ஒரு வகையான கிராபைட்

7.தீப்பெட்டி தயாரிக்கவும், எலி மருந்து தயாரிக்கவும் பயன்படுவது?

விடை: பாஸ்பரஸ்

8.கரிக்கோலின் (பென்சிலின்) நடுத்தண்டில் பயன்படுத்தப்படுவது?

விடை: கிரா∴பைட்

9.ரப்பரை கெட்டிப்படுத்துவதில் (வல்கனைஸ் செய்தல்) பயன்படுவது?

விடை: கந்தகம்

10.தீப்பெட்டியின் பக்கவாட்டில் உள்ளது?

விடை: சிவப்பு பாஸ்பரஸ்

11.தீக்குச்சியின் தலைப்பகுதியில் உள்ளது?

விடை: பொட்டாசியம் குளோரேட்டும், ஆண்டிமனி டிரைசல்பைடும்

12.மின்னாற்பகுத்தல் எனப்பொருள்படும் "எலக்ட்ரோலைசிஸ்" என்ற சொல் யாரால் அறிமுகப்படுத்தப்பட்டது?

விடை: மைக்கேல் பாரடே



Coaching for : Bank / SSC / Railways / TNPSC / Insurance / CSAT / TNUSRB 9884 222249

Shakthii

13.உயிரி வினைவேக மாற்றிகள் எனப்படுவது?

விடை: என்சைம்கள் மற்றும் ஈஸ்ட்டுகள்

14.முட்டைக்ள் அழுகும்போது எந்த வாயு உருவாவதால் துர்நாற்றம் வீசுகிறது?

விடை: ஹைட்ரஜன் சல்பைடு

15.இரும்பாலான பொருள்கள் நீர் மற்றும் ஆக்ஸிஜனுடன் தொடர்புகொள்ளும்பொழுது வேதிவினைக்கு உட்படுகின்றன. இந்நிகழ்வு?

விடை: துருப்பிடித்தல்

16.காகிதம் எரிதல் என்பது ஒரு _____

விடை: வேதியியல் மாற்றம்

17.வெட்டப்பட்ட ஆப்பிள் பழுப்பாக மாறுவதற்குக் காரணமான நிறமி ____

விடை: மெலனின்

18.சுண்ணாம்புக்கல் _______ஐ முதன்மையாகக் கொண்டுள்ளது?

விடை: கால்சியம் கார்பனேட்


Coaching for : Bank / SSC / Railways / TNPSC / Insurance / CSAT / TNUSRB 9884 222249
Shakthii

19.மழைநீரில் கரைந்துள்ள சல்பர் டைஆக்சைடு மற்றும் நைட்ரஜன் ஆக்சைடுகள் ______ஐ உருவாக்குகின்றன.

விடை: அமிலமழை

20.புவி வெப்பமாதலுக்கு காரணம் ?

விடை : கார்பன் டை ஆக்சைடு

21.டார்டாரிக் அமிலம் எந்த உணவுப் பொருளில் உள்ளது?

விடை: புளி

22.வினிகரில் உள்ள அமிலம் ?

விடை: அசிட்டிக் அமிலம்

23.காப்பர் மற்றும் பித்தளை பாத்திரங்களின்மீது பூசப்படும் உலோகம் ?

விடை: வெள்ளீயம் (ஈயம்)

24.ஊறுகாய் போன்ற உணவுப்பொருள்கள் கெட்டுப்போகாமல் இருக்க பயன்படுவது?

விடை: பென்சாயிக் அமிலம் அல்லது வினிகர்

Shakthii

25.சோப்புகளின் வழவழப்புத் தன்மைக்கு காரணம்?

விடை: காரங்கள்

26.குளியல் சோப்பு தயாரிக்க பயன்படும் காரம்?

விடை: பொட்டாசியம் ஹைட்ராக்சைடு

27.சலவை சோப்பு தயாரிக்க பயன்படும் காரம்?

விடை: சோடியம் ஹைட்ராக்சைடு

28.சிவப்பு எறும்பு கடிக்கும்பொழுது அல்லது தேனி கொட்டும்பொழுது தோலினுள் உட்செலுத்தப்படும் அமிலம் _____

விடை: ஃபார்மிக் அமிலம்

29.தொழிற்சாலைகளில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுகளில் உள்ள அமிலம்?

விடை: சல்பியூரிக் அமிலம்

30.செயற்கை நிறங்காட்டிக்கு சில எடுத்துக்காட்டுகள்?

விடை: பினாப்தலின் மற்றும் மெத்தில் ஆரஞ்சு

Shakthii

31.மெக்னீசியம் ஹைட்ராக்சைடு ______ஐ குணப்படுத்தப் பயன்படுகிறது.

விடை: அமிலத்தன்மை

32.நாம் பல்துலக்க உதவும் பற்பசை எந்த தன்மையைக் கொண்டது?

விடை: காரம்

33.மஞ்சள்தூள் நிறங்காட்டியானது கார கரைசலில் மஞ்சள் நிறத்திலிருந்து ________நிறமாக மாறுகிறது.

விடை:சிவப்பு

34.சதுப்பு நில வாயு என்பது?

விடை: மீத்தேன்

35.LPG சிலிண்டர்களில் மணமற்ற புரப்பேன் வாயு பயன்படுத்தப்படுகிறது. இதனால் வாயுக்கசிவை கண்டறிய முடியாது .எனவே வாயுக் கசிவை கண்டறிய கலக்கப்படும் துர்நாற்றம் தரும் வேதிப்பொருள் ?

விடை: மெர்கேப்டன்

36.டார்ச் விளக்குகளில் எரிபொருளாகப் பயன்படுவது?

விடை: பியூட்டேன்

Shakthii

37.அருங்காட்சியகங்களில் உள்ள பழங்கால நினைவுச் சின்னங்களைப் பாதுகாக்க பயன்படும் வாயு?

விடை: இயற்கை வாயு

38.அமெரிக்காவில் மரவாயு மற்றும் இங்கிலாந்தில் உறிஞ்சு வாயு என்று அழைக்கப்படும் வாயு?

விடை: உற்பத்தி வாயு

39.உற்பத்தி வாயு என்பது?

விடை: கார்பன் மோனாக்சைடு வாயுவும், நைட்ரஜன் வாயுவும் கலந்த கலவையாகும்.

40.உயிரி வாயு என்பது?

விடை: மீத்தேன் மற்றும் கார்பன் டைஆக்சைடு வாயுக்களின் கலவையாகும்.

41.ஹைட்ரஜன்,மீத்தேன் மற்றும் கார்பன் மோனாக்சைடு ஆகிய வாயுக்களின் கலவை?

விடை: நகரவாயு அல்லது கரி வாயு

42.கருப்பு வைரம் என்பது?



Shakthii

விடை: நிலக்கரி

43.உலகின் முதல் பெட்ரோலிய கிணறு எங்கு தோண்டப்பட்டது?

விடை: அமெரிக்கா

குறிப்பு : இரண்டாவது கிணறு இந்தியாவில் உள்ள அசாமில் மாக்கும் என்ற இடத்தில்.

44.கருப்பு தங்கம் என அழைக்கப்படுவது?

விடை: பெட்ரோலியம்

45.எதிர்காலத்தில் மிகச் சிறந்த மாற்று எரிபொருளாக இருக்கப்போவது?

விடை: ஹைட்ரஜன்

46.தமிழ்நாட்டில் காற்றாலைகள் அமைந்துள்ள இடம்?

விடை: கயத்தாறு, ஆரல்வாய்மொழி, பல்லடம் மற்றும் குடிமங்கலம்.

47.தொகுப்பு வாயு என்றழைக்கப்படுவது?

விடை: நீர்வாயு

48.ஒரு எரிபொருள் கலோரிமதிப்பின் அலகு?


**Coaching for : Bank / SSC / Railways / TNPSC / Insurance / CSAT / TNUSRB 9884 222249**

Shakthii

விடை: கிலோஜூல் / கிலோகிராம்

49._______என்பது உயர்தரமான நிலக்கரி வகை.

விடை: ஆந்த்ரசைட்

50.பெட்ரோலியம் என்ற சொல் பாறை எனப் பொருள்படும் பெட்ரா மற்றும் ___________ என்ற இலத்தின் மொழிச் சொற்களிலிருந்து பெறப்பட்டது.

விடை: எண்ணெய் எனப் பொருள்படும் ஓலியம்

Shakthii

.........................................................................................

**Video Class Available Link :**
**https://shakthiiacademy.com/online-classes-for-you/**

**Subscribe Our Youtube Channel :**

**"Shakthii Academy"**

For more Details : Call / Whatsapp : 9884 2222 49